People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

21.10.2017

# பத்திரிக்கைச் செய்தி

**விழுப்புரம் மாவட்டம் – செஞ்சி ஒன்றியம் – நேகனுர் புதூர் – அரசு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மீண்டும் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள பாலியல் குற்றமிழைத்த ஆசிரியர் குமார் மீது தமிழக பள்ளிகல்வித்துறை அரசாணை 121 / 17.05.2012ன் படி துறைவாரியான நடவடிக்கை எடுக்காமல் இருப்பதை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாக கண்டிக்கிறது**

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் ஏதாநெமிலி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பணியாற்றிய ஆசிரியர் குமார் மீது மூன்று பெண் குழந்தைகளை பாலியல் வன்புணர்வு செய்த குற்றத்திற்காக செஞ்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார். தற்போது விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் நேகனுர் புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு மீண்டும் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். ஆசிரியரின் பாலியல் குற்ற பின்னணியை அறிந்த அப்பகுதியில் உள்ள பொது மக்களும் பெற்றோர்களும் பள்ளிக்கு முன்பாக மாணவர்களுடன் இணைந்து ஆசிரியர் குமார் அவர்களை பணி நியமனம் செய்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தியுள்ளார்கள். இச்செய்தி இன்றைய நாளிதழ்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பள்ளி மாணவர்களுக்கு முன்னுதாரணமாகவும், வழிகாட்டியாகவும் செயல்பட வேண்டிய ஆசிரியர்களில் சிலர் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளிடம் ஒழுக்ககேடான முறையில் நடந்து கொள்ளுவது குறித்தும் அதனால் பெண் குழந்தைகள் மோசமாகப் பாதிக்கப்படுவது குறித்தும் மனித உரிமை அமைப்புகளின் வலியுறுத்தலுக்கு இணங்க **"தவறு இழைக்கும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்தல் மற்றும் தவறுகள் ஏற்படாமல் தவிர்த்தல்"** தொடர்பாக தமிழக பள்ளிக்கல்வித்துறை கொண்டு வந்த அரசாணை (எண் 121 / 17.05.2012) பாராட்டுக்குரியது.

ஆனால் இந்த அரசாணை இன்னும் செயல்படுத்தப்படாமல் இருப்பது கடும் கண்டனத்திற்குரியது. இந்த அரசாணையின் படி பாலியல் குற்றமிழைத்த ஆசிரியர் மீது துறைவாரியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர் உடனடியாக நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட வேண்டும். மேலும் அவரது கல்விச்சான்றுகள் அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டும்.

எமது அமைப்புக்கு தெரிந்த வரை 2012ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்த அரசாணையின்படி இதுவரை எந்த ஒரு ஆசிரியர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த அரசாணையை செயல்படுத்த வேண்டிய மாவட்ட கல்வித்துறை அலுவலர்கள் பாதிப்பை ஏற்படுத்திய ஆசிரியர்களுக்கு சாதகமான போக்கையே வெளிபடுத்தி வருகிறார்கள். தமிழகத்தில் பள்ளி ஆசிரியர்களால் மாணவிகள் பலர் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டதாக தொடர் செய்திகள் வந்தும் அவர்கள் மீது இந்த அரசாணையின் படி எந்த நடவடிக்கையையும் எடுக்காமல் இருப்பதை மக்கள் கண்காணிப்பகம் வன்மையாக கண்டிக்கிறது.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் நேகனூர் புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு பாலியல் குற்றமிழைத்த ஆசிரியர் குமார் மீண்டும் பணிநியமனம் செய்யப்பட்டிருப்பதையும் மக்கள் கண்காணிப்பகம் வன்மையாக கண்டிக்கிறது. இவர் மீதும் தொடர்புள்ள கல்வித்துறை அலுவலர்கள் மீதும் உடனடி விசாரணை மேற்கொண்டு துறைவாரியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த அரசாணை குறித்த விழிப்புணர்வை கல்வித்துறை அதிகாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பள்ளிக் குழந்தைகளுக்கும் வழங்கிட தமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம்.

இப்படிக்கு



ஹென்றி திபேன்
செயல் இயக்குனர்
மக்கள் கண்காணிப்பகம்